முருகப்பெருமான் துணை

**மகான் ஏனாதிநாத நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.07.2022, திங்கட்கிழமை

1. தானவான்கள் ஞானவான்கள்
   தரணியெங்கும் பெருக வேண்டி
   ஞானமருளி வழிநடத்தி வரும்
   ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது மிதுன திங்கள்
   வரங்களென இருபான்திகதி சோமவாரம்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 20 நாள், 04.07.2022 திங்கட்கிழமை)
   வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே ஏனாதிநாத நாயனாரும்
   தக்க உலகநலம்பெற உரைப்பேன்
   உண்மைபட மக்களை நோக்கி
   உயர்வு வழிகாட்டும் அரங்கன்
4. அரங்கன் சொல் செயல்கள்
   அனைத்தும் ஆறுமுகனார் தரும்
   வரங்களாக இருந்து வர
   வணங்கி அரங்கன் குடிலை நோக்கி
5. நோக்கி உலகமக்கள் வர
   நிலமதனில் ஞானபலம் கூடி
   தேக்கமின்றி உலக மக்கள்
   தேறுவர் அரங்கன் ஆசிபட
6. ஆசிதந்து தீட்சை தந்து அருளும்
   அருட்குரு நிழலின் கீழ்
   பேசிட உலகோர் சரணடைய
   பேதமிலா யாவரும் சன்மார்க்க
7. சன்மார்க்க ஞானவான்களாகி
   சகலரும் மாறுவர் தேறுவர்
   நன்மை காணும் ஞான பூமியாக
   நாட்டிடுவேன் மாற்றம் கண்டு
8. கண்டுமே கலியிடர்களெல்லாம்
   கரைந்தோடி பாதுகாப்பு மிக்க
   தொண்டுள்ளம் கொண்டநல்
   தூய ஆளுமையாக மாற்றம்
9. மாற்றம் உலகினில் நடக்கும்
   மக்களெல்லாம் தயவுமிக்க
   ஆற்றல் கூடி அரங்கன்தருமம்
   அளவிலா வளர வகை செய்து

10. செய்துமே தரும வேலிதனை
சிறப்பான பாதுகாப்பாக நிறுவி
அய்யமிலா முழுமைபட உலகில்
அரங்கன் பால் சரணடைவு கொண்டு

11. கொண்டுமே ஞானிகள் ஆவர்
குறைவிலா ஞானவான் நிறைந்த
தொண்டுமிக்க ஞான ஆட்சிபடைப்பர்
தெரிவித்த அருளாசி முற்றே

—சுபம்—